**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

நாள் 21.11.2025

அசல் வழக்கு எண். 230/2023

பி.சா. 1– வேண்டாமணி, த/பெ. சிவன்

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

வடிகால் இருப்பதாக சொல்லி உள்ளீர்கள் சர்வே எண் 36 மற்றும் 37 இடையில் செல்வதாக சொல்கிறீர்கள் அதற்கு ஆவணம் தாக்கல் செய்தீர்களா என்றால் கிராம கால்வாய் வரைபடம் தாக்கல் செய்துள்ளேன். எதைப் பார்த்து அதை கண்டுபிடித்தீர்கள் என்றால் எனக்கு தெரிந்தவரை அந்த கால்வாயில் தண்ணி வந்து கொண்டு தான் இருக்கும். கால்வாய்க்கு என்று தனிப்பட்ட சர்வே நம்பர் உண்டா என்றால் கிடையாது. பிரிட்டிஷார் ஆட்சி காலத்தில் அந்த கால்வாய் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொல்லி உள்ளீர்கள் அதனை எதை பார்த்து கண்டுபிடித்தீர்கள் என்றால் கிராம வரைபடம் பார்த்து கண்டுபிடித்தேன். பிரிட்டிஷ் ஆட்சியில் எந்த ஆண்டு ஆவணத்தை பார்த்தீர்கள் என்றால் எனக்கு தெரிந்து சுமார் 15 அல்லது 20 ஆண்டுகள் முன்பு அந்த கால்வாய் இருந்தது. சுதந்திரத்திற்கு பிறகு ஏன் அந்த ஆவணங்கள் காணப்படவில்லை என்றால் பல வருடமாக அந்தப் பக்கமாக சொத்து இருப்பதால் ஆக்கிரமிப்பு செய்து இருப்பார்கள். வாதியோ அல்லது அவர்களது மூதாதையர்கள் எத்தனை ஆண்டுகளாக ஆண்டு அனுபவித்து வருகிறார்கள் என்றால் எனக்கு தெரிந்து சுமார் 25 அல்லது 30 ஆண்டுகளாக அனுபவித்து வந்துள்ளார்கள். இதுவரை சென்று கொண்டிருந்த கால்வாய் வாதி எதற்காக ஆக்கிரமிப்பு செய்தார் என்றால் அது பஜார் மதிப்புமிக்க ஏரியா என்பதால் ஆக்கிரமிப்பு

செய்தார்கள். அந்த கால்வாயை சீர்படுத்தி தண்ணீர் செல்லும் வகையில் பொதுப்பணித்துறையினர் பணி ஏதேனும் செய்தார்களா என்றால் செய்தார்கள் 2006 ஆம் ஆண்டு தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின் அடிப்படையில் அதை செய்தார். உங்களைப் பொறுத்த அளவில் ஏரி கால்வாய் நீர்நிலை யாவும் பொதுப்பணித்துறை அதிகார வரம்பிற்கு உட்படுத்தப்பட்டது என்றால் தாங்கல், குட்டை, குளம் ஆகியவை வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கு சொந்தமானது ஆகும். பி.சா.ஆ4 நீங்கள் கெஜட் தாக்கல் செய்து உள்ளீர்கள் அதில் என்ன நீர்நிலை பற்றி எழுதியுள்ளது என்று தெரிந்து கொண்டீர்களா என்றால் தெரிந்து கொண்டேன். நீர்நிலைகள் உபரி தண்ணீர், ஏரி வடிகால் தண்ணீர் அனைத்தும் பொதுப்பணித்துறை அதிகாரத்திற்கு உட்பட்டது என்றால் சரிதான். உங்களுக்கும் கால்வாய்க்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரி இல்லை பஞ்சாயத்துக்கும் சம்பந்தமில்லை என்றால் சரி இல்லை. பி.சா.ஆ2ல் 9போட்டோ போட்டு உள்ளீர்கள் எந்த சர்வே நம்பர் எந்த இடம் என்று குறிப்பிடவில்லை என்றால் சரியில்லை. வழக்கிற்கும் வழக்கு சொத்து இருக்கும் போட்டோவிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரி இல்லை. பி.சா.ஆ1 கொசவன் தாங்கல் சர்வே எண் 41 என்றால் சரிதான். அதில் 11 என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரியில்லை 41 என்றுதான் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு போட்டவர் எந்த சர்வே எண்ணுக்கு வழக்கு போட்டார் தெரிந்து கொண்டீர்களா என்றால் தெரியாது. சர்வே எண் 37/5ஏ1ஏ மற்றும் 37/5ஏ1சி வழக்கு சொத்து என்றால் தெரியாது. மேற்படி இரண்டு சர்வே எண்கள் எந்த ஆண்டு உட்பிரிவாக செய்யப்பட்டது பார்த்தீர்களா என்றால் தெரியாது. 2008 ஆம் ஆண்டு உட்பிரிவு செய்து விட்டார்கள் என்றால் தெரியாது. மேற்படி சர்வே எண்களில் எந்த சர்வே எண் நீர்பிடிப்பு என்று பார்த்தீர்களா என்றால் சர்வே

எண் 37/5 எந்த இடம் நீர்பிடிப்பு என்று பார்த்தீர்களா என்றால் 36க்கும் 37க்கும் நடுவில் இருக்கிறது. 37 சர்வே எண் எத்தனை உட்பிரிவுகளாக உள்ளது என்றால் தெரியாது. எந்த சர்வே எண் நீர்ப்பிடிப்பு என்றால் சர்வே எண் 37 நீர்ப்பிடிப்பு ஆகும். 37 ல் 1 மற்றும் 2 உட்பிரிவில் உள்ள சர்வே எண்கள் நீர்ப்பிடிப்பு என்று சொன்னால் சரிதான். உட்பிரிவு 3, 4 மற்றும் 5 ஆகியவை நீர்ப்பிடிப்பு இல்லை என்று சொன்னால் சரியில்லை. வடிகால் கால்வாய் பற்றி உங்களுக்கு தெரியாது என்றால் சரியில்லை. தலைவர் என்கிற முறையில் பொதுப்பணித்துறை அதிகாரிகளுக்கு எப்பொழுதாவது கடிதம் அனுப்பினீர்களா என்றால் அனுப்பி உள்ளேன். நீதிமன்றத்தில் தாக்கல் செய்தீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. தாசில்தார் பொதுப்பணித்துறை ஊழியர்கள், சர்வேயர் அழைத்துச் சென்று காட்டினீர்களா என்றால் காட்டி உள்ளேன். அவர்கள் ஆவணங்களை வைத்து சரி பார்த்தார்களா என்றால் சரி பார்த்தார்கள். மேற்படி அதிகாரிகள் வாதியை பார்த்து அறிவிப்பு ஏதேனும் கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள் எழுத்துப்பூர்வமாக கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள். ஆனால் உங்கள் பிரமாண வாக்குமூலத்தில் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்லி உள்ளீர்கள் என்றால் சரியில்லை. நீங்கள் உண்மைக்கு மாறாக சாட்சியமளிக்கிறீர்கள் என்றால் சரியில்லை. நீங்கள் அரசாங்கத்தை தரப்பினராக சேர்க்க மனு செய்தீர்களா என்றால் இல்லை. வாதிகள் அவர்களுடைய சொத்தை தான் அனுபவித்து வருகிறார்கள் அவர்களை அலைக்கழிக்க வேண்டும் என்பதற்காக எதிர்வழக்காடி கொண்டிருக்கிறீர்கள் என்றால் சரியில்லை. நீங்கள் அரசு அதிகாரிகளுக்கு எதிராக சாலை மறியல் செய்தீர்கள் என்றால் சரிதான். யாரிடம் என்ன சொல்லி சாலை மறியல் செய்தீர்கள் என்றால் உத்தரவு

**பெறாமல் சாலை மறியல் செய்தேன். வாதியை வம்பு செய்வதற்காக எதிர் வழக்காடுகிறீர்கள் என்றால் சரியில்லை.**

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram